Registered as a Newspaper in Ceylo: ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 56

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 25 ஹிஜ்ரி ... 4 7-4-65 புதன்கிழமை

## குறுகுறுக்கும் நெஞ்சங்கள்!

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் பரிசோதனை செய்து மோசடிகளைக் கண்டு பிடித்துவரும் கணக்குப் பரிசோதகர்களுக்கு இப்பொழுது 'மொட்டைக் கடிதங்களும்' பயமுறுத்தல் கடிதங்களும் தினசரி கிடைத்து வருகின்றனவாம். ஆஸ்பத்திரியில் நடைபெற்றுள்ள பல ஊழல்களையும் மோசடிகளையும் கண்டுபிடித்து மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ள பரிசோதனைக்குழு துப்பறியும் பொலிஸாரால் கூடக் கண்டுபிடிக்க முடியாமல் போன பல விஷயங்களைக் கண்டுபிடித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறதாம். மொட்டைக் கடிதங்களும்' மிரட்டல் கடிதங்களும் கிடைத்தும் பரிசோதனைக்குழுவினர் தமது வேலையில் சிறிதும் தயக்கம் காண்பிக்காது "குறுகுறுத்த குற்றமுள்ள நெஞ்சங்களுக்கு" மேலும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாகத் தெரிகிறது. மோசடிகள் வெளியானதைத் தொடர்ந்து விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன. பரிசோதனையின் முடிவடைந்ததும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிகிறது.

"இடதுசாரித் தலைவர்களை கைது செய்யும் உத்தரவு"

# "சேரம், திஸநாயக்கா பொறுப்பு பீலிக்ஸ் அல்ல"

## புரட்சிச் சதிவழக்கு நீதியரசர்கள் கருத்து

கொள்ளுப்பிட்டி, செவ்வாய்

புரட்சிச்சதிவழக்கில், இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை (பிற்பகல் 4-15 மணி) பதினொரு பிரதிவாதிகள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

இன்று காலை 9-15 மணிக்கு கொழும்பு கோட்டை பிரான்கின் .... வீதியில் கடற்படைத் தலைமை காரியாலயத்தில் அமைந்துள்ள சதிவழக்கு நீதிமன்றம் கூடியபொழுது நீதிமன்றத்தின் உள்ளே பொதுமக்களுக்கென ஆசனங்கள் எல்லாம் நிரம்பியிருந்தன. பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களும் முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர்களும் நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருந்தனர். சரியாக 9-30 மணிக்கு பிரதம நீதியரசர் எம். ஸி. சன்சோனியும் நீதியரசர் எல். பி. டி. சில்வா, நீதியரசர் எச். என் ஜி. பெர்னாண்டோ ஆகியோரும் தங்கள் ஆசனங்களில் வந்து அமர்ந்தனர்.

நீதிமன்றம் கூடியதும் நீதியரசர் திரு. எச். என் ஜி. பெர்னாண்டோ தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்தார். சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட தீர்ப்பு நண்பகல் இடைவேளைக்காக

(6-ம் பக்கம் பார்க்க)

## 11 எதிரிகளுக்கும் தலா 10 வருடசிறை!

கொள்ளுப்பிட்டி, செவ்வாய்

புரட்சிச்சதி வழக்கில் இன்று பதினொரு பிரதிவாதிகளுக்கும் தலா பத்து வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களுடைய சொத்துக்களையும் அபகரிக்கும் படியும் நீதியரசர்கள் தீர்ப்பளித்தனர். இத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

(பிற்பகல் 5-15க்கு கிடைத்த கடைசிச்செய்தி)

## ஐ. நா. வில் ரஷ்யா-அமெரிக்கா மோதல்

### வியட்னும் நெருக்கடி குறித்து பரஸ்பரம் குற்றச்சாட்டு

நியூயோர்க், ஏப்ரல் 6

இன்று ஐ. நா. வில் ரஷ்யாவும் அமெரிக்காவும் வியட்னும் விஷயமாக மோதிக் கொண்டன.

சர்வதேச சட்டத்தின்படி அமெரிக்கா வியட்னுமில் ஆக்கிரமிப்பு நடத்திவிருப்பதாகவும் தென்கிழக்காசியாவில் அது யுத்தத்தைப் பரப்புவதாகவும் ரஷ்யப் பிரதிநிதி குற்றஞ்சாட்டினர்.

அமெரிக்கப் பிரதிநிதி பேசுகையில் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பே இந்த நிலைமைக்குக் காரணம் என்றும் தென்வியட்னும் அரசாங்கத்தை வீழ்த்த அவர்கள் நாசவேலை, ராணுவ நெருக்குதல் ஆகிய முயற்சிகளை மேற் கொள்வதாயும் பதில் குற்றம் சாட்டினர்!

மாஸ்கோவில் சோவியத் ஜனாதிபதி திரு. மிகோயன் வியட்னுமில் அமெரிக்க ஆக்கிரமிப்பு மிகவும் அபாயகரமான நிலைமையைத் தோற்றுவித்திருப்பதாயும் இது நிற்க வேண்டுமெனவும் கூறியிருக்கினர்.

இதற்கிடையில் 17 மண்டலசார்பற்ற நாடுகள் வியட்னும் விஷயமாகக் கூறியுள்ள யோசனையை ஆராய்வதாக ஜனாதிபதி ஜோன்ஸன் கூறியிருக்கிறார்.



### சர்வகலாசாலை செனட் அங்கத்தவர் திரு. அம்பிகைபாகன் நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

சர்வகலாசாலை 'செனட்' அங்கத்தவராக வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மூன்று வருடங்களுக்கு பல்கலைக்கழக செனட்டில் அங்கம் வகிப்பார்.

திரு. அம்பிகைபாகன் இலங்கை சாகித்திய மண்டலத்தின் நடப்புவருட அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

காலஞ் சென்ற செனட்டர் ச. நடேசபிள்ளையின் இடத்திற்கு ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கப் பிரதிநிதியாக இவர் சாகித்திய மண்டலத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றபின் 1926-ம் ஆண்டு சென்னை 'பிரஸிடென்ஸி' கல்லூரியில் ... பட்டம்பெற்றபின் இலங்கை திரும்பிய திரு. அம் ...

(6-ம் பக்கம் பார்க்க)

## "தொழிலில் தாழ்வு மனப்பான்மை கூடாது"

பருத்தித்துறை, செவ்

"இதன் விலங்கையில் விவசாயத்துக்கு அடுத்தபடியாகத் தச்சுத் தொழிலுக்கே கௌரவம் அளிக்கப்படுகிறது. படித்த வாலிபர்கள் அரசாங்க உத்தியோகத்தைவிட தச்சுத் தொழிலில் தமது திறமையைச் செலவிட்டால் அவர்களுக்கு நல்ல எதிர்காலம் நிச்சயமாக ஏற்படும். தொழிற்பயிற்சி பெறும் மாணவர்களை மத்தியில் உள்ள தாழ்வுமனப்பான்மை அகலவேண்டும். பணவருவாயைக் கொண்டு தொழிலை மதிக்கக்கூடாது. ஒரு துண்டுத் தொழிலை படலர் விரும்பாதிருப்பதற்குக் காரணம் வருமானக் குறைவும் அதைச் சமூகம் மதிக்காதிருப்பதுமேயாகும்."

இவ்வாறு புலோலி தெற்கில் புதிதாகத் தச்சுத்தொழிற்சாலையொன்றைச் சம்பிரதாயமுறைப்படி தொடக்கிவைத்த

(6-ம் பக்கம் பார்க்க)

## "விருந்தில் பங்குபற்ற நமது தூதருக்கு அனுமதி அழித்தோம்"

### சென்யீ உபசாரம் பற்றி சுவர்ணசிங் அறிக்கை

புதுடில்லி ஏப்ரல் 6

காட்மாண்டுவில் நேபாள அரசாங்கம் சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென் யீக்கு நடத்திய விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு இந்திய அரசாங்கம் அங்குள்ள இந்தியத் தூதருக்கு அனுமதிவழங்கியதாய் வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண் சிங் கூறினர்.

தூதர் இது சம்பந்தமாக அரசாங்கத்தின் யோசனையை கேட்டிருந்தார் என்றும் கூறினர்.

"நேபாளத்துடன் நமது உறவு க்ஷேமமாயிருக்கிறது. சீனப் பிரதமர் சூ-என்-லாய் பல நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது அந்தந்த அரசாங்கங்கள் அவருக்களித்த வரவேற்பில் கலந்துகொள்ளுமாறு இந்தியத் தூதர்களுக்கு உத்தரவிடப்பட்டது என்றும் அவர் கூறினர்.

## நியூஸிலாந்து 2 விக். 263 ரன்கள்

லாகூர், ஏப்ரல் 6

நியூஸிலாந்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இன்று இடைவேளைவரை நியூஸிலாந்து 2 விக்கெட் நஷ்டத்திற்கு 263 ரன்கள் எடுத்திருக்கிறது.

பாகிஸ்தான் தன் முதல் இன்னிங்ஸில் 7 விக்கட் நஷ்டத்திற்கு 385 ரன்களை எடுத்து தன் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

மலிவு! S. R. S. மலிவு!

ஜவுளி மாளிகையில்

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு

ஏராளமான

புடவைத் தினுசுகள் வந்திருக்கின்றன.

விலைகள் ரொம்பவும் குறைத்திருக்கின்றோம்.

உங்கள்

தேவைகளை முன்னதாகவே வந்து தெரிவுசெய்யுங்கள்.

எமது சொந்த தறிகளில் தயார் செய்த

80, 100, 120-ம் நம்பர் கைத்தறி சேலைகளும்

விற்பனைக்கு இருக்கின்றன.

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனிதர்களாகிய நாம், உயிர் கொண்ட பிராணிகளனைத்தையும் நம்முடைய உறவினர்களாகவும் நம்முடன் ஒரு குடும்பமாகவும் பாவிக்கவேண்டும். இப்படிச் சகல பிராணிகளுடனும் சகோதரத்வம் கொண்டாடுவதுதான் நமது உரிமையும் கடமையுமாகும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
தமிழ் தினசரி
EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 25 உ. (7-4-65)

## புதிய சபாநாயகர்

சேர் ஆல்பர்ட் பீரிஸ், பார்லிமெண்ட் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைக் குறித்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. மைத்திரிபால சேனாநாயக்காவும் மகிழ்ச்சி தெரிவித்தார். எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையையும் பெற்றுள்ள அவரது தலைமையின் கீழ், புதிய பார்லிமெண்ட் சபை மேலாகவும் பயனுள்ள முறையிலும் பணி செய்யுமென்று நம்ப இடமுண்டு.

புதிய சபாநாயகரைப் பாராட்டுகையில் சமய வேற்றுமைகளைப்பற்றிய கோஷங்களைச் சிலர் எழுப்பியது துரதிருஷ்டமாகும். சிறுபான்மை சமயத்தைச் சேர்ந்த ஒருவர் அம்மேலான பதவியை வகிப்பது இது முதல்தடவையல்ல, சேர் ஆல்பர்ட் உள்ளிட்டு அப்பதவியை இதுவரை வகித்து வந்துள்ள சிறுபான்மைசமூக, சமயத்தவர்பலரும், போற்றுதலையும் பெறத்தக்க முறையில் அப்பொறுப்பை நிறைவேற்றி வந்திருக்கின்றார்கள். சிறுபான்மைச் சமூகத்தவருக்கு புதிய நம்பிக்கையும், அவர்களது குறைகள் சீக்கிரத்தில் தீர்க்கப்படலாமென்பதற்கும் ஒரு நல்ல அறிகுறி போலும். சேர் ஆல்பர்ட்டின் தேர்தல் இச்சமயம் ஒரு சுபகுசகமாக விளங்குகின்றது.

பார்லிமெண்ட் சபாநாயகரின் தேர்தல் போட்டியில் இருதரப்பு அபேட்சகருக்கும் கிடைத்துள்ள வாக்குகள், அரசுக்கட்சிக்கு நல்ல பலம் இருப்பதைக் காட்டுகின்றது. எதிர்க்கட்சி அபேட்சகரை விட, அரசாங்கக்கட்சி அபேட்சகருக்கு 89 அதிகப்படியான வாக்குகள் கிடைத்துள்ளன. இரு நியமன அங்கத்தவர்கள் தீவுக்கு வெளியிலுள்ளனர். அவர்களையும் சேர்ப்பின் அரசாங்கக்கட்சிக்கு 41 அதிகப்படி வாக்கு பலமிருக்கும்.

மொத்தம் 157 மெம்பர்கள் அடங்கிய சபையில் அரசாங்கக்கட்சிக்குப் பலமான மெஜாரிட்டிபலம் இருப்பினும் மூன்றில் இரண்டுபங்கு ஸ்தானங்கள் அவர்களுக்கு இல்லை. ஆகவே அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமாயின் எதிர்க்கட்சிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவைப்படுவதாக இருக்கும். நேர்மாறான கொள்கைகளுள்ளவர்களைக் கொண்டது திரு. டட்லியின் மந்திரிசபை. இதை நடத்திச் செல்வது நிச்சயம் சுலபமன்று. பல ஆபத்துகளும் சோதனைகளும் ஏற்படலாம். தேசிய நலனுக்கான பொதுவான பலவிஷயங்களிலும் கவனம் செலுத்தி, பொதுமக்களின் நன்மையைப் பாதுகாப்பதிலும் சமூக ஒற்றுமையை வளர்ப்பதிலும் புதிய பிரதமர் அதிக சாமர்த்தியமாக காரியங்கள் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் புதிய சபாநாயகர் சேர் ஆல்பர்ட் பீரிஸின் மேலான அனுபவமும் திறமையும் பொதுவாக பார்லிமெண்டுக்கும் சிறப்பாக பிரதமருக்கும் பெருந்துணையாக இருக்கும்,

# தனித்துவம் வாய்ந்த சதி வழக்கும், பின்னணியும்

இலங்கையின் சரித்திரத்திலேயே இன்று தீர்ப்புவழங்கப்பட்ட புரட்சிச் சதிவழக்கு ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது. மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பையும் ஆவலையுமேற்படுத்திய இவ்வழக்கு மூன்று ஆண்டுகாலமாகப் பல சூழ்நிலைகளிலும் திருப்பங்களிலும் நடைபெற்ற சிறப்பையும் தன்னகத்தே அடக்கியுள்ளது.

மும்மூன்று நீதியரசர்களைக் கொண்ட விசேஷ நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்பட்ட தனிச்சிறப்பும் இந்த வழக்குக்கே உரியதெனலாம். இந்த வழக்கின் சிறப்புக் காரணமாக விசாரணை செய்யப்படும் பிளாக்லொட் வீதியில் அமைந்துள்ள நீதிமன்றமே இலங்கை நீதிமன்றங்களின் சரித்திரத்தில் தனியிடத்தைப் பெற்றுள்ளது.

### 31 பேர் விசாரிக்கப்பட்டனர்

1962ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ந் தேதி சனிக்கிழமை மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அரசாட்சி செய்து வந்த அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ய முயற்சித்தார்கள் என்ற காரணத்துக்காக இராணுவ கடற்படை பொலிஸ் படைகளைச் சேர்ந்த முப்பத்தொரு உயர்தர அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யும்பொருட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். அரசாங்க உயர்தர வட்டாரங்களினால் ஆரம்ப விசாரணை செய்யப்பட்ட பின்னர் இவர்களில் எழுவர் விடுவிக்கப்பட்டனர். மிகுதியான 24 பேர்மீதும் மக்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதித்திட்டம் உருவாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 18-7-62ல் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரணைசெய்ய பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற விசேஷ சட்டத்தின் பிரகாரம் ஜூரிகள் இல்லாத மூன்று நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றம் ஒன்றை அப்போதைய நீதிமந்திரி நியமித்தார். முதலாவது நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ரி. எஸ. பெர்னாண்டோ (தலைவர்) எல். பி. டி. சில்வா, பி. சிறிஸ்கந்தராஜா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

### ஜேய்ஸ் டிமெலே ஜி. ஜி. ஆஜர்செய்தார்

முதலாவது நீதிமன்றத்தில் சதிவழக்கு விசாரணை நடைபெற்றபோது பொலிஸாரினால் கண்டுபிடிக்க முடியாத திரு. ஜேய்ஸ டிமெல்லே நீதிமன்றத்தில் ஆஜர்செய்யமுடியுமென முன்னறிவித்தல் கொடுத்த சிரேஷ்டவழக்கறிஞர் திரு. ஜி. ஜி பொன்னம்பலம் 30-7-62ல் அவ்வாறு ஆஜர்செய்தது ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியாகும்.

முதலாவது நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் நீதிமந்திரிக்கு இல்லையென்றும், அப்படிச் செய்ததன் மூலம் நீதிவழங்கும் விஷயத்தில் அரசாங்கம் தலையிட்டுள்ளதெனவும் இதன்காரணமாக இந்த நீதிமன்றத்துக்கு வழக்கை விசாரிக்கும் அதிகாரம் இல்லையென எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர்கள் சட்டப்பிரச்சினையைக் கிளப்பினர். இதை ஏற்றுக்கொண்டு நீதியரசர்கள் முதலாவது நீதிமன்றத்தைக் கலைத்தனர்.

### இரண்டாவது நீதிமன்றம்

முதலாவது நீதிமன்றம் கலைக்கப்பட்டதும், நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரத்தை பிரதம நீதியரசருக்கு அளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட சட்டம் பார்லிமெண்டில் 1962-ம் ஆண்டிலேயே திருத்தம் செய்யப்பட்டது. புதிய திருத்தச் சட்டத்தின் பிரகாரம் முன்னாள் பிரதம நீதியரசர் திரு. எச். பசநாயக்கா, நீதியரசர்கள் எல். பீ டி. சில்வா, சிக்ஸ்ரி ஹொத் ஏ டபிள்யு எச். அபயசுந்தரா ஆகியோரைக் கொண்ட இரண்டாவது நீதிமன்றத்தை நியமித்தார்.

இரண்டாவது நீதிமன்றம் 16-1-63-ல் விசாரணையை ஆரம்பித்தபோது அட்டோணி ஜெனரல் திரு டக்ளஸ ஜான்ஸ கிளப்பிய ஆட்சேபனை ஒன்றைத் தொடர்ந்து இரண்டாவது நீதிமன்றமும் கலைக்கப்பட்டது.

### மூன்றாவது நீதிமன்றம்

இரண்டாவது நீதிமன்றம் கலைக்கப்பட்ட ஆறுவது நாளே வழக்கில் தீர்ப்பு வழங்கிய மூன்றாவது நீதிமன்றத்தை முன்னாள் பிரதம நீதியரசர் நியமனம் செய்தார். இந்த நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சன்சோனி, நீதியரசர்கள் எல். பீ. டி. சில்வா, எச் என் ஜி பெர்னாண்டோ ஆகியோர் அங்கம் வகித்து கடந்த இரண்டு வருடங்களாக விசாரணை நடத்தி இன்று தீர்ப்பு வழங்கினர்.

24 எதிரிகளில் சிலர் இறந்ததாலும், சிலர் விடுதலைசெய்யப்பட்டதாலும் தீர்ப்பு வழங்கும் தினத்தில் 11 எதிரிகளே தீர்ப்பை எதிர்பார்த்திருந்தனர்.

எதிரிகளில் ஒருவரான டபிள்யு எஸ ஏபரகாம் விளக்கமறியலில் இருக்கும் பொழுது காலமானார். 12 எதிரிகள் காலைத்திற்குக் காலம் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் விபரம்:-

திருவாளர்கள் டேவிட் தம்பையா, ஜேட்னி டி' மெல், எஸ ஜி ஜாகஸன், டபிள்யு இ ஜீ ஜெயபாலசேகன், வி ஜே எச் குணசேகரா, ஏ ஜே அங்கி, டி இ ஜயசிங்கா, என் எஸ ஜெயக்கொடி, பி ஜ லை யிலா, எச் ஜ வயிற், வி எ பி ஜேசவ்

விசாரணை நடக்கும்பொழுது சாட்சிகளான திரு சி ஒ லஸ ஒரும் திரு ரெயிலரும் காலமானார்கள்.

## தமிழ் நிகழ்ச்சிகள் ஆங்கிலத்தில்!

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை வானொலி தமிழ் ஒலிபரப்புப் பகுதியினரால் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படும் நிகழ்ச்சிநிரல் கிழமை தோறும் ஆங்கிலத்திலேயே அனுப்பப்படுகிறது. தமிழ் நிகழ்ச்சிகளை ஏன் ஆங்கிலத்தில் அனுப்பவேண்டும் என்று நேயர்கள் கேட்கின்றனர் என்பது நிறது.

## சபாநாயகரும் உபசபாநாயகரும்

புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சேர் அல்பர்ட் இரண்டு பாராளுமன்றங்களில் சபாநாயகராகக் கடமையாற்றியுள்ளார். இந்த அனுபவத்தினால் இவர் பாராளுமன்றத்தில் சகல வேலைகளையும் பாரபட்சமற்ற முறையிலும் - நிதானமாகவும் கடமையாற்றுவதில் திறமைகாண்பித்துள்ளார் சேர் அல்பர்ட் 1900ம் ஆண்டு மேமாதம் 12ம் திகதி பிறந்தார், கொழும்பிலுள்ள சென் ஜோசேப் கல்லூரியில் கல்விபயின்று விளையாட்டுத் துறையிலும் கல்வித்துறையிலும் பல விசேடசாதனைகளை நிலைநாட்டினார் 1932ம் ஆண்டு புறக்டராகச் சித்தியெய்தி முதல் கொழும்பிலும் பின்னர் சிலாபத்திலும் தொழில் பார்த்து வந்தார், 1933ம் ஆண்டில் உலுணு ஆட்சி மன்றமான மெடபலத்தாவ கிராம சபையின் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து 17 ஆண்டுகள் அதன் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

1947ம் ஆண்டு ஜனவரிமாதம் நடைபெற்ற சட்டசபை இடைக்காலத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் ஆனால் முதல் பாராளுமன்றத் தேர்தலுக்காக சட்டசபை கலைக்கப்பட்டதனால் சேர் அல்பர்ட் சட்ட சபையில் ஒருநாள்கூட பிரசன்னமாயிருக்க முடியவில்லை. 1947ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது அவர் நாத்தாண்டியா தொகுதிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றார்'

1951ம் ஆண்டில் சேர் பிரான்சிஸ மொலமுரே மயங்கி பாராளுமன்றத்தில் அறிவிழந்த நிலையில் அப்புறப்படுத்தப்பட்டு காலமானார். அதன்பின்னர் சேர் அல்பர்ட் பாராளுமன்றத்தின்சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் சேர் அல்பர்ட் திரு சி பி கபசிங்காவுடன் போட்டியிட்டு 85 வாக்குகளால் தோல்வியுற்றார். இம்முறை சேர் அல்பர்ட் மீண்டும் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உபசபாநாயகராக திரு ஷேர்லி கொரியா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் திரு டட்லி சேனநாயகாவின் மந்திரிசபையில் வர்த்தக மந்திரியாக முன்னர் கடமையாற்றியுள்ளார். அவர் புறக்டராக 1932-ம் ஆண்டில் சித்தியெய்தி 1945-ம் ஆண்டில் சிலாபம் நகரசபை அங்கத்தவராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

1956-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் இவருடன் போட்டியிட்ட திரு. ஜே. வி. டபிள்யு, முனசிங்கா வெற்றி பெற்றார்.

## 'இளைஞரும் சமுதாயமும்'

யாழ்ப்பாணம்; புதன்

"உயிரோடு தொடர்புடைய அறிவை வளர்த்து ஆன்ம ஈடேற்றத்தைப் பெறவேண்டும், சைவத்தையும் தமிழையும் வளர்க்க இளைஞர்கள் முன்வரவேண்டும். முதியவர்கள் சமயத்தை உணர்ந்தால் அது அவர்களுக்கு மட்டுமே நன்மையைக் கொடுக்கும். ஆனால் இளைஞர்கள் பணியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஒரு சிறந்த சமுதாயத்தையே உருவாக்கமுடியும்" என்று மாதகல் நுணசை முருகமூர்த்திகோவில் திருவிழாவில் சொற்பொழிவின்போது புலவர் மு. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

### ஐயாறன் எழுதுவது

பாதுகாப்பு லோகசாகரக் காரியதரிசி" யாக இருந்த என். கியூ டயஸ் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறும் செய்தியைக் கேட்டு பல அன்பர்கள் ஆறுதலும் மகிழ்ச்சியும் தெரிவித்தனர். இனி யாத்திரைக் கெடுபிடிகள் தளரலாமென்று பலர் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

பக்கத்திலுள்ள இந்தியாவுக்கும் யாத்திரை செய்யமுடியாமல் என்னென்ன தடைகள் போடலாமோ எல்லாம் போட்டார் அந்தப் புண்ணியவான். தாலிக்கொடி போட்டுக்கொண்டு யாத்திரை செய்த தாய்க்குலத்தாரில் பலர் தலைமன்னாரிலேயே அதைக் கழற்றி வைத்துவிட்டுச் செல்ல நேரிட்டபோது, அத்தாய்மார்களின் மனம் என்ன வேதனைப்பட்டதோ.

யாழ்ப்பாணம் அவரை என்றும் மறக்கமுடியாது, சத்தியாக்கிரக காலத்திலே ஆறுவாரகாலத்துக்கு இங்கு ரேஷன் அரிசி கிடைக்காமல் போனதும் இந்த மகானுபாவரின் ஆட்சிகாலத்தில்தான்.

வடமாகாணத்தில் பல இராணுவ முகாம்களை அமைத்தார். சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுப்பதற்காக என்று சொல்லி இந்த முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. தலைமன்னார், கும்பனித்தெரு முகாம்கள் ஹிட்லரின் 'பெல்ஸன்' சிறைகள் என்றும் பார்லிமெண்டில் வர்ணிக்கப்பட்டன. சமீபகாலத்தின் அடிக்கடி குறுவளி. வடமாகாணத்தில் சில இராணுவ முகாம்களையும், தலைமன்னார் முகாம் சிறைகளையும் அழித்துவிட்டது. இப்போது பொதுத் தேர்தல் வந்து, இவற்றின் சிருஷ்டி கர்த்தாவான என். கியூ. டயஸையே அப்பதவியிலிருந்து மட்டுமன்றி, அரசாங்க சேவையிலிருந்தே நீங்கும்படி செய்துவிட்டது.

இப்படி நேருமென்று யார் தான் எதிர்பார்த்தனர். என். எம், நிதிமந்திரியானதும் அவருக்கும், என் கியூ, வுக்கும் பலத்த மோதல் ஏற்பட்டது. இந்திய ஹைகமிஷன் விருந்துக்கு, மந்திரிகள் யாரும்கூட செல்லப்படாதென்றும் என். கியூ உத்தரவிட்டாராம், இதை என். எம், பலமாக ஆட்சேபித்தார். அந்த அமளியில் என். கியூ. வுக்குப் பதவி மாறுதலாவது ஏற்படுமென்று பலர் எதிர்பார்த்தனர். அப்படி எதுவும் ஏற்படவில்லை,

பழைய எதிர்ப்பக்கு என். கியூ. இலக்கானாரென்றாலும், அவரிடம் பல நல்ல குணங்களுண்டென்று சிலர் பாராட்டுவதையும் கேட்டிருக்கிறேன். இது எப்படியாயினும், யாத்திரை கெடுபிடிச் சட்டங்கள் சீக்கிரம் தளருமென்றும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் யாத்திரை வசதிகள் இனிமுன் போல் ஏற்படுமென்றும் பலரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

* * *

எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்றாய் நீயே ஏகம்பம் மேய இறைவன் நீயே, வண்டிசைக்கும் நறுங்கொன்றைத் தாராய் நீயே வாராவுலகருள வல்லாய் நீயே, தொண்டிசைக்குன் அடிபரவ நின்றாய் நீயே தூமலர் சேவடி மேல் வைத்தாய் நீயே, திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே திருவையாறகலாத செம்பொற் சோதீ.

—அப்பர் அடிகள்

## இன்று

புங்குடுதீவு கிழக்கு கண்ணகை அம்மன் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவிலில் இன்று இரவு வண்ணை ஸ்ரீ வி. எஸ. எஸ. மணிபாகவதர் 'தெய்வ நீதி' என்ற கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஜெர்மனி-மே. பெர்லின் போக்குவரத்து தடுக்கப்பட்டது

## அமெரிக்கா ஆட்சேபம்

வாஷிங்டன், ஏப்ரல் 6

மேற்கு ஜெர்மனிக்கும் மேற்கு பெர்லினுக்குமிடையே நேற்று 6 மணிநேரம் போக்குவரத்தினை கிழக்கு ஜெர்மனி தடைசெய்தது குறித்து அமெரிக்க ராஜாங்க இலாகா வன்மையான ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

இதன் காரணமாக வாகனங்கள் மைல்கணக்கில் நிறுத்தப்பட்டிருந்ததாயும் கிழக்கு ஜெர்மன் வீரர் உடமைகளைச் சோதனையிட்டதாயும் அதே சமயம் ரஷ்ய விமானம் ஒன்று தரைக்கு மிக அருகில் பறந்ததாயும் கூறப்பட்டது.

இவ்விஷயமாக அமெரிக்கா தனது நேச நாடுகளைக் கலந்தாலோசனை செய்ததாக அறிவிக்கப்பட்டது.

# கிருஷ்ணமேனன் - நாஸர் இரண்டு மணிநேர சந்திப்பு

## ஷேக்கின் முயற்சி பலிக்கவில்லை என நிருபர்களுக்கு பேட்டி

கெய்ரோ, ஏப்ரல் 6

முன்னாள் இந்தியப் பாதுகாப்புமந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று ஐக்கிய அரபியக் குடியரசு ஜனாதிபதி நாஸரைக் கண்டு பேசினார். இருவருக்குமிடையே இரண்டுமணி நேரம் சம்பாஷணைகள் நடைபெற்றன.

இதன்பின் திரு. மேனன் நிருபர்களுக்களித்த பேட்டியில் காஷ்மீர் விஷயமாக ஐக்கிய அரபியக் குடியரசின் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும், திரு. ஷேக் அப்துல்லாவின் முயற்சி இவ்விஷயத்தில் தோல்வியே அடைந்திருக்கிறதென்றும் கூறினார்.

அரசியலில் மதத்தைக் கலக்கும் முயற்சியை ஐக்கிய அரபியக் குடியரசு ஆதரிக்கவில்லை என்றும், இவ்விஷயத்தில் இந்தியாவின் கொள்கையையே அது ஆதரிக்கிறதென்றும் மேலும் அவர் கூறினார்.

திரு. கிருஷ்ணமேனன் பலஸ்தீன மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டுச் சென்றிருக்கிறார்.

திரு. ஷேக் அப்துல்லா நேற்று சியாசகத்தில் சவூதி அரேபிய மன்னர் பைசாலைக் கண்டு பேசியதாக மக்கா ரேடியோ அறிவித்தது.

# வியட்நாமில் அமெரிக்க கொள்கை வியாழக்கிழமை ஜோன்ஸன் அறிவிப்பார்

லண்டன், ஏப்ரல் 6

வியட்நாமின் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு ரஷ்யாவும் பிரிட்டனும் அமெரிக்காவைக் கூட்டாகக் கேட்கவேண்டுமென்ற ரஷ்ய கோரிக்கையை பிரிட்டன் நிராகரித்துவிட்டது.

வியட்நாமிலிருந்து அமெரிக்கா உடன் வெளியேற வேண்டுமென்ற கோரிக்கையையும் பிரிட்டன் நிராகரித்துவிட்டது.

தென்வியட்நாமில் சைகோனுக்கருகே நட்டக் கோளாறு காரணமாக ஒரு அமெரிக்க ஹெலிகோப்டர் நொறுங்கியதாயும் இதில் ஒருவர் மாண்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

மத்ரேசிடத்தில் நடைபெற்ற சண்டையில் இரு அமெரிக்க ஆலோசகர்கள் காயமடைந்தனர்.

வருகிற வியாழக்கிழமை அமெரிக்காவின் தென்வியட்நாம் கொள்கைபற்றி ஜனாதிபதி ஜான்ஸன் அறிக்கையொன்றை விடுக்கவிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

# ஊழியரை அடித்த மந்திரி டிஸ்மிஸ்

கார்ட்டூம், ஏப்ரல் 6

10 நாட்களுக்குமுன் ஒரு ஊழியரைக் கன்னத்தில் அடித்த மந்திரி ஒருவருக்கு சூடான் மந்திரிசபையிலிருந்து கல்தா கொடுக்கப்பட்டது.

தகவல் மந்திரியாக இருந்த இஸ்போ ஸிடுமந்திரி என்பவர் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தபோது சம்பாஷணை துண்டிக்கப்பட்டது. உடனே டெலிபோன் எக்சேஞ்சிற்குச் சென்று ஊழியரை அவர் அடித்தார். இதை அங்குள்ள சகல ஊழியர்களும் ஆட்சேபித்தனர்.

இதைத் தொடர்ந்து அந்த மந்திரிக்கு ராஜா அளிக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை மந்திரிசபை மாற்றியமைக்கப்பட்டபோது அதில் அவருக்கு இடமளிக்கப்படவில்லை.

# டெயிலர் திரும்பினார்

சைகோன், ஏப். 6

வாஷிங்டனின் ஆலோசனைக்காகச் சென்றிருந்த தென்வியட்நாமிலுள்ள அமெரிக்கத் தூதர் ஜெனரல் டெயிலர் நேற்று சைகோன் திரும்பினார். தென்வியட்நாம் பாதுகாப்புக்கு அமெரிக்கா முற்றாகக் கடமைப்பட்டிருக்கிறது என அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

# கடன் வாங்கியே ஜனாதிபதி

வாஷிங்டன், ஏப்ரல் 6

அரசாங்கத்துக்கு இவ்வாண்டு வரி செலுத்துவதற்காக இருபதினாயிரம் டாலர் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் நிருபர்களிடம் தெரிவித்தார். வலது கையால் கொடுக்கும் பணத்தை இடது கையால் வாங்கிக் கொள்ள அரசாங்கத்திடம் நடைமுறை இல்லை என அவர் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கு வருடச் சம்பளம் 1 லட்சம் டாலர். இதுபோக செலவுக்காக 50 ஆயிரம் டாலர் பெறுகிறார். ஜோன்ஸனின் சொத்து 40 லட்சம் டாலருக்கு அதிகம் என மதிப்பிடப்படுகிறது.

# இரகசியத் தகவல் கொடுத்ததால் கைது

வாஷிங்டன், ஏப். 6

பாதுகாப்பு இரகசியங்களையும், ராக்கெட் நிலையங்களையும் பற்றிய தகவல்களை ரஷ்யாவுக்குத் தெரிவித்ததாக 2 அமெரிக்கர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதே குற்றத்திற்காக பிரிட்டனில் ஒரு சிறுசேவை அதிகாரி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

# பம்பாய் மேயர்

பம்பாய், ஏப். 6

பம்பாய் மேயராக திரு. மாதவன் (காங்கிரஸ்) தெரிவு செய்யப்பட்டார்.

# பத்ரிநாத் யாத்திரை தற்காலிகமாகத் தடை

லட்சுமணபுரி, ஏப்ரல் 6

பத்ரிநாதத்தில் சமீபத்தில் பனிப்பாறைகள் சரிந்து சேதமேற்பட்டுள்ளதைக் கருதியும் ரிஷிகேசத்திலிருந்து ஜோஷிமதத்துக்கு ரஸ்தா அமைப்பு வேலை துரிதமாக நடந்து வருவதைக் கருதியும் அன்பர்கள் தற்போது யாத்திரை செல்ல வேண்டாம் என உத்தரபிரதேச கல்விமந்திரி ஸ்ரீ கைலாச பிரகாஷ் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பனிப்பாறை சரிவு காரணமாக அந்த நகருக்குப் பெருமளவு சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாயும் அவர் தெரிவித்தார்.

தள்ளுபடி

# லோகியா மீது ஆட்சேபனை மனு

பட்னா, ஏப்ரல் 5

டாக்டர் லோகியாவின் தேர்தலை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஜில்லா நீதிபதியும், ஒற்கூறு மெம்பர் தேர்தல் டிரிபியூனலுமான திரு. எஸ். கே. பவுல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்தார்.

# 20 பேர் மாண்டனர்

ஏதன்ஸ், ஏப். 6

கிரீஸின் தென் பகுதியில் வரலாற்றுப் புகழ் படைத்த மகலோபோலிஸ் பட்டினத்தில் ஏற்பட்ட பூகம்பம் காரணமாக 20 பேர் பலியாகியிருப்பதாயும், 300 பேருக்கு காயமேற்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. 50 பேருடைய நிலைமை கவலைக்கிடமாய் இருப்பதாயும், 6 கிராமங்கள் நாசமடைந்ததாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

# பிரான்ஸ் அனுப்பும்

பாரிஸ், ஏப். 6

தென்னாபிரிக்காவுக்கு பிரான்ஸ் தொடர்ந்து ஆயுதங்களை அனுப்புமென இங்கு அறிவிக்கப்பட்டது. அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகள் தென்னாபிரிக்காவுக்கு ஆயுத ஏற்றுமதியைத் தடை செய்திருக்கின்றன.

# ஜெயின் கவர்னரானார்

திருவனந்தபுரம், ஏப். 6

திரு அஜித் பிரசாத் ஜெயின் கேரளத்தின் புதிய கவர்னராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

# அமெரிக்கா மறுப்பு

வாஷிங்டன், ஏப். 6

தென்கிழக்காசியக்கடலில் ரஷ்யக் கப்பல்களுக்கு அமெரிக்க போர்க்கப்பல்கள் இடையூறு விளைவிப்பதாக ரஷ்யா கூறியிருக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையல்லவென அமெரிக்கா மறுத்திருக்கிறது.

# அயூப்கான்

மாஸ்கோ, ஏப். 6

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் நேற்று சோவியத் தலைவர்களுக்கு ஒரு விருந்து நடத்தினார். இன்று அவர் மாஸ்கோவிலிருந்து லெனின்கிராட் பயணமானார். நாளை மாஸ்கோ திரும்பி ரஷ்யத் தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவார்.

# மேலும் எண்மர் கைதாயினர்

ஸ்ரீநகர், ஏப். 6

காஷ்மீரில் மேலும் 8 வாக்கெடுப்பு முன்னணித் தலைவர் கைது செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

# ஆட்சிமொழி பிரச்னையில் தென் ராஜ்யங்களின் ஒற்றுமை

## அண்ணாதுரை வற்புறுத்து

மதுரை, ஏப். 6

ஹிந்தியை ஆட்சி மொழியாகத் திணிப்பதை ஒன்றுபட்டு எதிர்ப்புத் தெரிவிக்க ஹிந்தி பேசாத ராஜ்யங்களிடையே ஒற்றுமை நிலவவேண்டியது அவசியம் என திமுக தலைவர் திரு. அண்ணாதுரை கூறினார்.

தற்போது இந்த ஒற்றுமை காணப்படவில்லை என்றும், மாணவர் சமூகத்தால் இந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

ஹிந்தியை ஆட்சிமொழியாக்கும் விஷயத்தில் ஹிந்து தேசம் பீகார், உத்தரபிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய நான்கு ராஜ்யங்களின் அரசாங்கங்கள் மட்டுமல்லாமல், மக்களும் ஒற்றுமையாய் இருக்கின்றனர் என அவர் கூறினார்.

“ஆனால் ஹிந்தி பேசாத ராஜ்யங்களிடையே இத்தகைய ஒற்றுமை இல்லை. ஆங்கிலத்தை நீடிக்கும் விஷயத்தில் சென்னை ராஜ்யம் ஒரு நிலையை மேற்கொண்டுள்ளது. ஆனால் ஆந்திர, மைசூர் ராஜ்யங்கள் வேறு நிலையை மேற்கொண்டுள்ளன. இது நம்முடைய நிலையைப் பலவீனப்படுத்துகிறது” என்றும் அண்ணாதுரை கூறினார்.

“நான்கு ராஜ்யங்களிடையேயும் இந்த ஒற்றுமையை ஏற்படுத்த மாணவர் சமூகம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். வன்முறைச்செயல் எந்தப் பிரச்னைகளும் தீர்வு காண உதவாது. மாணவர்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபடலாகாது. அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக்கப் படவேண்டும். ஆங்கிலம் ஒன்று இணைப்புமொழியாக வேண்டும்” என்றும் அவர் தெரிவித்தார்.

# ராஜாஜியிடம் வசூலிக்கப்பட்ட வரி திருப்பிக் கொடுபடும்

## அப்பீல் வெற்றியின் விளைவு

சென்னை, ஏப்ரல் 6

திரு. சி. ராஜகோபாலாச்சாரிக்குத் தொழில் வரி விதிப்பது நிறுத்தப்பட்டுள்ளது என்றும், 1961—62 நிதிவருடத்திலிருந்து அவரது பென்ஷன் மீது தொழில்வரியாக வசூலிக்கப்பட்ட தொகையைத் திருப்பிக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் கார்ப்பரேஷன் கமிஷனர் கவுன்சிலுக்கும், மத்திய கமிட்டிக்கும் அனுப்பியுள்ள குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பென்ஷன்மீது தொழில்வரி வசூலிப்பதை ஆட்சேபித்து ராஜாஜி ஒரு ரிட் மனு தாக்கல் செய்தார். வரி வசூலிப்பது சட்டப்படி சரிதான் என ஹைகோர்ட் தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து 1962-ல் ராஜாஜி சுப்ரீம்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். வரிவசூலிப்பது சட்டவிரோதமானது என சுப்ரீம்கோர்ட் தீர்ப்பளித்தது.

ராஜாஜியின் பென்ஷன்மீது தொழில்வரி விதிப்பதை நிறுத்தும்படியும், 1961—62 லிருந்து வசூலிக்கப்பட்ட இந்த வரித்தொகையை திருப்பிக் கொடுக்க ஏற்பாடுசெய்யும்படியும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

பாலஸ்தீன கருத்தரங்கு

# “மகாநாட்டிலிருந்து வெளியேறிவிடுவேன்”

## சீனப்பிரதிநிதி - மேனன் மோதல்

கெய்ரோ, ஏப் 6

பாலஸ்தீனம் பற்றி இங்கு நடக்கும் சர்வதேசக் கருத்தரங்கில் சீனாவுக்கு செம்மையாகக் கொடுத்தார் கிருஷ்ணமேனன்.

சுதந்திரப் பிரிய நாடுகள் எல்லாமது எல்லைகளில் ஆக்கிரமிப்புகளுக்கு இடந்தராதபடி படைகளிலும் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டு இந்தியாவே அத்தகைய ஒரு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருப்பதாக கிருஷ்ணமேனன் சுட்டிக் காட்டினார். ஆனால் சீனாவை அவர் பெயர் சொல்லிக் குறிப்பிடவில்லை.

மேனன் பேசி உட்கார்ந்ததும் சீனப் பிரதிநிதி மேடைக்குப் பாய்ந்து சென்று அவர் சீனாமீது ஆக்கிரமிப்புக் குற்றஞ்சாட்டியுள்ளதாக ஆட்சேபித்தார்.

மேனன் சீனப்பிரதிநிதிக்குப் பதிலளித்துச் சொன்னதாவது:-

இந்த பாலஸ்தீன விவாத அரங்கு சீன இந்திய எல்லைத் தகராற்றைக் குறித்து விவாதிக்கக்கூடிய இடமல்லவாகையால் நான் வேண்டுமென்றே சீனாவின் பெயரைக் குறிப்பிடாமலிருந்தேன். ஆனால் சீனப் பிரதிநிதியின் குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கிறது போலும். நான் சொன்னது சீனாவுக்குப் பொருந்துகிறது என்றால் நன்றாக வைத்துக் கொள்ளட்டுமே.

இதன்பின் மேனன், சீனா இந்தியா மீது அசாதாரணமாக ஆக்கிரமித்த வரலாற்றை எடுத்துரைத்து, சீனாவின் கொள்கைகள் உலகிலுள்ள முற்போக்கு சக்திகளுக்கெல்லாம் ஆபத்தானவை” எனக் கடுக்கடுத் தெடுத்தார்.

சீனப் பிரதிநிதி இரண்டாம் தடவையாக திரு மேனனுக்குப் பதிலளிக்க விரும்பினார். திரு மேனன் இடையில் குறுக்கிட்டு “நம் பூனிலைட் சீனப்பிரதிநிதியை இரண்டாம் தடவை பேச அனுமதித்தால் நான் மகாநாட்டிலிருந்து வெளியேறிவிடுவேன்” என மகாநாட்டுக்காரர்களை எச்சரித்தார். இதைத் தொடர்ந்து சீனப் பிரதிநிதி பேச மகாநாடு அனுமதிக்கவில்லை.

# கள்ளக்குடியேற்ற தடுப்பு

சென்னை, ஏப்ரல் 6

சென்ற மாதம் இலங்கைக்கு கள்ளக் குடியேற்ற முயற்சியில் ஈடுபட்ட 11 நபர்களும், 22 பிரயாணிகளும் கைதுசெய்யப்பட்டனர் என்றும், 2 படகுகள் பிடிபட்டன என்றும் அறிவிக்கப்படுகிறது.

கராச்சி, ஏப். 6

மொரீஷியஸ் தீவில் பெரும்பான்மை ஹிந்துக்களின் கீழ், சிறுபான்மை முஸ்லிம்கள் நசுக்கப்படுவதாயும் இவ்விஷயத்தில் பாகிஸ்தானின் ஆதரவு கோரப்பட்டிருப்பதாயும் கராச்சி ரேடியோ அறிவித்தது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலை இருந்தென்ன இங்கு சிமெந்து இல்லையே!

யாழ்ப்பாணம், செவ்வாய் காங்கேசன்துறையில் சிமெந்துத் தொழிற்சாலை இருந்தும் கூட சிமெந்துத் தட்டுப்பாடு யாழ்ப்பாணப் பகுதியில் பெருமளவு ஏற்பட்டுள்ளது போதிய சிமெந்து கிடைக்காத காரணத்தால் பாவனையாளர்கள் பெருங் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாண மக்களுக்கு வேண்டிய சிமெந்தியை சிமெந்துத் தொழிற்சாலையால் உடனுக்குடன் வழங்க முடியாமலிருப்பதுவே இத்தட்டுப்பாட்டுக்குரிய காரணமெனக் கூறப்படுகிறது.

சிமெந்துத் தொழிற்சாலையில் கடந்த மார்ச் 1-ம் திகதிக்குப் பின் பாவனையாளர்களின் பெர்மிட்டுகளுக்குச் சிமெந்து வழங்கப்படவில்லை. சிமெந்திற்கான பர்மிட்டுகளை சிபாரசு செய்யவேண்டாமென சிமெந்துத் தொழிற்சாலை வடபகுதியிலுள்ள காரியாதிகாரியிடம் கோரியுள்ளது. தற்பொழுது சிறுதொகை மாத்திரம் காரியாதிகாரிகள் மூலமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்கின்றன. சிறு தேவைகளுக்கான சிமெந்து மட்டுமே காரியாதிகாரிகள் விநியோகிக்கக்கூடிய தாகவுள்ளது மாதத்திற்கொரு முறை நடைபெறும் இந்த விநியோகத்திற்குக்கூட ஆயிரக்கணக்கான பாவனையாளர்கள் காரியாதிகாரி கந்தோர்களில் காலை தொடக்கம் மாலைவரை கால்கடுக்கக் நிற்கவேண்டியிருக்கின்றது.

காரியாதிகாரிகள் இவ்விஷயமாக நடவடிக்கை எடுக்கும்படி சிமெந்து கூட்டுஸ்தாபனத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். பொது மக்களின் கஷ்டங்களைத் தீர்க்கக்கூடியவகையில் வேண்டிய சிமெந்து வழங்குவது அவசியமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 'கன்னாதை' அம்மன் மகோற்சவம்

யாழ்ப்பாணம், புதன் புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் கோற்சவம் நேற்று ஆரம்பமானது. 15-ம் தேதி வியாழக்கிழமை இரதோற்சவமும் அன்று மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## மந்திரிகளை அழைக்க முடிவு

யாழ்ப்பாணம், புதன் இணுவில் தேசிய விவசாயிகள் மகாநாட்டு பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது தேசிய அரசாங்கத்தின் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவையும், தபால் தந்தி மந்திரி திரு. எம். திருச்செல்வத்தையும், விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டாவையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவின் போது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. இ. பொன்னம்பலம், உபதலைவர்: ஆ. வடிவேலு, காரியதரிசி: திரு. செல்லகுநாதன், உபகாரியதரிசி: திரு. க. சச்சிதானந்தன், தனாதிகாரி: திரு. ச. செல்வரத்தினம், பத்திராதிபர்: திரு. க. வேதநாயகம்.

10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## எஸ். ஜே. வி. கோரிக்கை

கொழும்பு, செவ்வாய் வருடப்பிறப்புக்கு இம்முறை மூன்று பொதுவிடுமுறை நாட்கள் வருகின்றபடியால் பெருந்தொகையான அரசாங்க ஊழியர்களும் ஏனையோர்களும் வடக்கே போகவேண்டி வருமாதலால் விசேட புகையிரதங்களை ஒழுங்கு செய்யுமாறு இலங்கை ரயில்வே அதிபருக்கு தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

சனிக்கிழமை 10-ம் தேதி கொழும்பிலிருந்து, 13-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறையிலிருந்து விசேட புகையிரதங்களை ஒழுங்குசெய்தால் பிரயாணம் செய்பவர்களுக்கு வருவதற்கும் போவதற்கும் வசதியாகவிருக்கும். விசேட புகையிரதங்களை பகல் யாழ்தேவி புறப்படுவதற்கு சில நேரம் முந்தியும் இரவு மெயில் வண்டிக்குப் பிந்தியும் ஏற்பாடு செய்தல் நல்லது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு (7-4-65)

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவசுத்சிந்தனை, 6-55 இஸ்லாமிய சுத்சிந்தனை, 7-10 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளை ஒலிபரப்புகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 பாட்டு—ரி. இராஜலிங்கம், 7-45 பேச்சு—'எங்கள் முறைகள்' டாக்டர் ரி. குணரத்தினம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-15 திரைஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

## "சைவாசிரிய கலாசாலையை மீண்டும் திறக்குக!"

### சைவ இளைஞர் மாமன்றம் கல்விமந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், புதன் சைவசமயத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆசிரியர்களாக பயிற்சிபெறும்போது அவர்களது கலாச்சார அடிப்படையில் இயங்கும் சைவாசிரிய கலாசாலை எதுவும் இல்லையென்றும், மூடப்பட்ட திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மீண்டும் திறக்கும்படி வடமாகாண சைவ இளைஞர் மாமன்றம் கல்வி மந்திரிக்கும் வித்தியாபதிக்கும் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரியுள்ளது.

சைவ இளைஞர் மாமன்றம் அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சைவமாணவர்களுக்கு ஓரேயொரு ஸ்தாபனமாக விளங்கிவந்த திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அண்மையில் மூடப்பட்டுள்ளது. அங்கு பயின்ற சைவமாணவர்கள் கல்லூர், கொழும்புத் துறை ஆகிய பயிற்சிக் கலாசாலைகளுக்குச் சென்றுள்ளார்கள். அவ்விடங்களில் அம்மாணவர்கள் சைவசமய நெறிமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடித்தொழுக முடியாத முறையில் பல இன்னல்கள் அடைந்துள்ளார்கள், சமய வைபவங்கள் செவ்வனே நடைபெற்றுவர முட்டுக்கட்டைகளும் உண்டு. சைவ மாணவர்களுக்கென தனியான வழிபாட்டு ஸ்தலம் இல்லாமை பெருங்குறையாகும். இதனால் சமய சாதனைக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. மாணவர்களில் கல்வி வளர்ச்சிக்குச் சூழல் தக்க முறையில் அமைந்திருக்கவேண்டும்.

முஸ்லிம்கள் பௌத்தர்களுக்கென அவர்கள் கலாச்சாரங்களுக்கு அமைவாக ஆசிரிய கலாசாலைகள் இருந்து வருகின்றன. சைவ மாணவர்களுக்கு அவர்கள் கலாச்சார அடிப்படையில் ஒரு சைவாசிரிய கலாசாலை அவசியம் தேவையாகும். ஆதலால் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மீண்டும் திறந்து நடத்த நடவடிக்கை யெடுக்கப்படவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

## புதிய கைத்தொழில்களில் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்

### காரியாதிகாரியின் ஆலோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய் "வருடம் முழுவதும் மாறி மாறிக்கிடைக்கின்ற பொருட்களைக்கொண்டு புதிய கைத்தொழில்களில் இளைஞர்களும் பெண்களும் ஈடுபடவேண்டும் அப்போதுதான் எதற்கும் பிற நாட்டினை எதிர்பார்த்திருக்கும் தற்போதைய நிலை மாறும்" என்று வலி-வடக்கு காரியாதிகாரி திரு தி. முருகேசபிள்ளை இணுவிலில் புதிய கைத்தொழில பயிற்சி வகுப்பினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக் கழகம் இணுவில் மிஷன் பாட்சாலை மண்டபத்தில் தக்காளிப்பழத்திலிருந்து ஜாம் செய்யும் முறையை விளக்கும் பயிற்சி வகுப்பு ஆரம்பித்தது. காரியாதிகாரி திரு முருகேசபிள்ளை தொடர்ந்து பேசியதாவது:-

இரண்டொரு மாதங்களுக்கொருமுறை விவசாயிகளுக்கு கிடைக்கும் பிரயோசனத்தைப் பயன்படுத்தவேண்டும். தக்காளிப்பழம், மாம்பழம், கருப்பநீர், பனம்பழம் என்பனவற்றிலிருந்து பலவகையான பொருட்களை உற்பத்திசெய்ய முடியும். இத்துறையில் இளைஞர்களும் இளம்பெண்களும் ஈடுபடவேண்டும். கிடைக்கும் நேரத்தை வீணாக்காது அவற்றை தகுந்த வழியில் செலவிட்டு நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிகோலவேண்டும். நமது நாட்டில் எத்தனையோ சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. இவற்றை எல்லாம் அலட்சிய மனோபாவத்துடன் தட்டிக்கழிக்கும் எண்ணம் மாறவேண்டும்.

வலி-வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாஜ செயலாளர் திரு. தி. சி. சண்முகலிங்கம் பேசியதாவது:-

இளைஞர்கள் நல்ல வாய்ப்புக்களை ஒருபோதும் நழுவவிடக்கூடாது இவற்றினை நல்லமுறையில் பயன்படுத்த ஒற்றுமை வேண்டும். ஒன்றுபட்ட சக்திதான் எந்த முன்னேற்றத்திற்கும் அடிகோலும்.

திரு. பொ. கனகசபாபதி வரவேற்புரை நிகழ்த்தினர். கிராமசபை அங்கத்தவர் திரு. இ. பொன்னம்பலம், திருமதி தர்மலிங்கம், திரு. கந்தப்பு முதலானோரும் பேசினர். பயிற்சிக்காகச் செய்துகாண்பிக்கப்பட்ட தக்காளிப்பழ "ஜாம்" விற்பனையை கிராமசபை அங்கத்தவர் திரு. ம. குமாரலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

## 75 பேர் மொட்டையடித்தனர்

மூதூர், செவ். தேர்தல் முடிந்து அரசாங்கம் அமைக்கப்பட்டு, பார்லிமெண்ட் கூடியும் விட்டது. ஆனால் தேர்தலையொட்டி பந்தயம் பிடித்தவர்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

மூதூர் பட்டினசபை எல்லைக்குள் வசிப்பவர்களில் இதுவரை 75 பேருக்கு மேல் தங்கள் தலைமயிர்களை முற்றிலும் மொட்டை அடித்துள்ளனர். இன்னும் பல புதுமுறைகளையும் கையாண்டுள்ளனர். சிலர் அரை மொட்டை அடித்தும், அரை மீசை வழித்தும் வீதிகளில் அலைந்துச் செல்லப்பட்டனர். இன்னும் சிலர் நடுவில் மட்டும் மயிர்பாவி மயிர் இருக்க சுற்றிவர தலைமயிரை வழித்துள்ளனர். சிலர் கண்மயிரையும் வழித்துள்ளனர்.


புது வருடப்பிறப்பை
சிறப்பாகக் கொண்டாட
ஏராளமான பிடவை வகைகளை
வரவழைத்துள்ளோம்,
மிகவும் குறைந்த விலைகளில்
புதிய டிசைன்களிலுள்ள
ஜவுளிகளை தெரிவுசெய்வதற்கு
இன்றே
எமது ஸ்தாபனத்திற்கு விஜயஞ்செய்யுங்கள்.
மைலன்ட்ஸ்
115, 117, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கெப்பிட்டல்
(கொட்டாஞ்சேனை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பானுமதி — பத்மினி
(மற்றும் பலர் நடித்த)
ராஜா
தேசிங்கு

REGAL — JAFFNA
NOW SHOWING
Kenneth More
SOME PEOPLE
(Eastman color)

அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய
விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "பௌத்த மதத்தை குழிதோண்டி புதைத்துவிட்டது"

## அரசாங்கத்தின் மீது

## திரு. ஸ்டான்லி திலகரத்ன கண்டனம்

கொழும்பு, செவ்வாய்
"பௌத்த அரசாங்கமொன்று இந்த நாட்டில் ஸ்தாபிக்கப்படும்வரை நமது போராட்டம் ஓயாது. இன்று இங்கு மூன்று முக்கிய பதவிகளுக்கும் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேராதவர்கள். இது மிக்க கவலையளிப்பதாகவிருக்கிறது. பௌத்த மதத்தைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் இந்த நியமனங்களைச் செய்ததன் மூலம் பௌத்த மதத்தை பாதுகாத்துவிட்டதா என நான் கேட்க விரும்புகிறேன்"

இவ்வாறு பார்லிமெண்டில் இன்று நடைபெற்ற நியமனங்களுக்கெல்லாம் நன்றிதெரிவித்துப் பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த அங்கத்தவரும் கோட்டை எம். பி.யுமான திரு. ஸ்டான்லி திலகரத்ன குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் மூன்று கத்தோலிக்கர்களை உயர்ந்த ஸ்தானங்களில் அமர்த்தியதால் யு. என். பி. பௌத்த மதத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டதென்றார்.

### 'வகுப்புவாதத்தால் ஏமாற்றமுடியாது'

இதன் பின்னர் பேசிய அரசாங்கக்கட்சி அங்கத்தவர் திரு. அசோகா கருணரத்ன வகுப்புவாதத்தையும் சமய பேதங்களையும் வளர்ப்பதில் எதிர்க்கட்சியினர் முனைந்திருக்கின்றனரென்றும் இது போன்ற பிரசாரத்தால் மக்களை ஏமாற்றிவிடமுடியாதென்றும் தகுதிவாய்ந்தவர்களே மூன்று ஸ்தானங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்டது மக்களுக்குத் தெரிந்ததேயெனவும் கூறினர்.

# "தமிழரசுக்கட்சியின் உறுதியே சாதக நிலைக்கு காரணம்"

## வரவேற்புக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. உரை

கொழும்பு, செவ்வாய்
"தமிழர்களின் ஒத்துழைப்பின்றி நிலையான ஒரு அரசாங்கத்தை அமைக்கமுடியாத நிலையைத் தமிழரசுக்கட்சி பொதுவாக உணர்த்தியுள்ளது. தமிழரசுக்கட்சி கடைப்பிடித்துவந்த உறுதியே இப்போது அமைந்துள்ள சாதகமான ஒரு சூழ்நிலைக்குக் காரணமாக இருந்துள்ளது. தமிழ்மக்கள் சூழ்நிலையைநன்கு ஆராய்ந்து விழிப்புடனும் மிக்க அவதானத்துடனும் இருக்கவேண்டும்"

இவ்வாறு கிளிநொச்சி எம். பி.யும் தமிழரசுக்கட்சி அங்கத்தவருமான திரு. க. பொ. இரத்தினம் கொழும்பு கிறீன்லண்ஸ் ஹோட்டலில் ஆதரவாளர்கள் தமக்களித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ்மக்கள் தங்களுக்குள்ள உரிமைகளைப் பெற்று அமைதியான நல்வாழ்வு வாழவேண்டுமென்பதே தமிழரசுக்கட்சியின் நோக்கமென்றும் கிளிநொச்சியில் வள்ளுவர் பெயரில் பண்ணையொன்றை ஆரம்பித்துச் சகலவசதியான ஆசிரமச் சைக்கிள் தொழில்களையும் அங்கு ஆரம்பித்து நடத்தத் தாம் முயற்சி மேற்கொள்ளப் போவதாகக் கூறினர்.

வடபகுதி அசைஸ் விசாரணை

# தெல்லிப்பளை கொலைவழக்கில் எதிரிக்கு 7 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், புதன்
தெல்லிப்பளை கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை ஆரம்பமான போது எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட திரு வி. நடராசா, எதிரிதான் கையெழுத்திட்டுச் செய்த குற்றச்சாட்டில் குற்றவாளி என ஏற்றுக்கொள்வதாக நீதியரசரிடம் தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர் எதிரிக்கு ஏழுவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளித்த சமயம் நீதியரசர் தெரிவித்ததாவது:-

உமது சார்பாக உமது வழக்கறிஞர் கூறியதை ஏற்றுக்கொள்கிறேன். இதற்கு முன் நீர் குற்றச்சாட்டில் ஈடுபடவில்லையென அறிகிறேன். காலஞ்சென்ற பெண்மீது முறி காயங்கள் பத்துக்கு மேல் இருந்தன. சில இடங்களில் துண்டு துண்டாக குதிக்கப்பட்டிருக்கிறது. நீர் பிசாசுபிடித்த மனிதன் போல நடந்திருக்கிறாய். 7 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கிறேன்.

இவ்வழக்கில் 64-ம் ஆண்டு ஏப்ரல் 10-ம் திகதி தெல்லிப்பழையில் தம்பையா திருநாவுக்கரசு என்பவர் சின்னையா கைம்பெண் சின்னத்தங்கத்தை கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

# ஆபாசம் என்றால் என்ன?

## இலக்கணம் தயாராகிறது

புதுடில்லி, ஏப். 6
ஆட்சேபகரமான பிரசுரங்களை வெளியிடுவதையும், விநியோகிப்பதையும் தடுக்கும் நோக்கத்துடன் "ஆபாசம்" என்பதற்கு விளக்கத்தை நிர்ணயிக்க அரசாங்கம் முயன்று வருகிறது என உள்துறை இலாகா துணை மந்திரி திரு. ஹாத்தி லோகசபையில் கூறினார்.

சிறுவர் மனதைக்கெடுக்கக் கூடிய பிரசுரங்கள்பற்றி நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாக அங்கத்தினர்கொண்டுவந்திருந்த தனியார் திருத்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டு மந்திரி பேசினார். இவ்விஷயம் ஏற்கனவே சட்டக்கமிஷனின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது என்றார்.

மனதைக் கெடுக்கக் கூடிய பிரசுரங்களை ஒழிக்கவேண்டுமென்பதில் இருவித அபிப்பிராயங்களுக்கு இடமிருக்கமுடியாதென்றும், ஆனால் இதில் ஒரு சிரமம் என்னவென்றால் "ஆபாசம்" என்றவார்த்தைக்கு இந்தியன் பீனல் கோடில் விளக்கம் தரப்படவில்லை என்றும் எனவே குற்றவாளிகளைத் தண்டிக்கமுடியாமல் போய்விடுகிறது என்றும் மந்திரி கூறினார்.

மந்திரி பேசியபின் மசோதாவைக் கொண்டுவந்த திரு பட்டாச்சார்ய ஆதை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

# ஹொக்கி போட்டி

யாழ்ப்பாணம், புதன்
ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணக் கோட்டை மைதானத்தில் யாழ். ஹொக்கிச் சங்கத்தாரால் நடாத்தப்படும் சுற்றுப் போட்டியின் இறுதி விளையாட்டு, கடற்படையினருக்கும் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றது. விளையாட்டுத் தொடங்கி 6 நிமிடத்தில் கோப்பாயைச் சேர்ந்த குலேந்திரன் ஒரு கோல் போட்டார். கடற்படையைச் சேர்ந்த குணசேகரா ஒரு கோலைப் போட்டு சமமாக்கினர். பின் கடற்படையைச் சேர்ந்த பியதாசா என்பவர் ஒரு கோல் போட்டு, இடைவேளையின் போது கடற் படையினர் 2-1 கோலால் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின் குலேந்திரன் தனியே ஒரு கோல் போட்டு சமமாக்கினர். இறுதியில் இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

# சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்
கோப்பாய் வடக்கு சனசமூகநிலைய விளையாட்டுக் கழக ஏழாவது விளையாட்டுப் போட்டியும் சைக்கிளோட்டப்போட்டியும் புத்தாண்டு தினத்தன்று நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 12 மைல் சைக்கிளோட்டப் போட்டியும் விளையாட்டுப் போட்டியில் கின்னத்தட்டுப் போட்டியும் முக்கிய நிகழ்ச்சிகளாக இருக்குமெனச் சொல்லப்படுகிறது.

# 'உருளைக்கிழங்கு பயிரிடுங்கள்'

## அதிக வருமானம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்
'தேசிய வருமானம் பெருக வேண்டுமாயின் நமது நாட்டில் விவசாயம் பொருள் உற்பத்தி பெருக வேண்டும்' என்று யாழ். மாவட்ட கிருஷி அதிபர் திரு எஸ். கனகரத்தினம் இணுவிலில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக் கழகம் முதல் தடவையாக உற்பத்தி செய்த உருளைக்கிழங்கை இணுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கும் வைபவத்தை ஒட்டி நடந்த பொது கூட்டத்தில் திரு கனகரத்தினம் மேலும் பேசுகையில் தசிய வருமானம் சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் பெருக வாய்ப்பு உண்டெனவும் குறிப்பிட்டார்,

காரியாதிகாரி திரு டி. முருகேசபிள்ளை பேசியதாவது:-

உருளைக்கிழங்கு இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு வருடமொன்றுக்கு 20 கோடி ரூபாய் அனுப்பப்படுகிறது. இதனை இந்த நாட்டில் உருளைக்கிழங்கை உற்பத்தி செய்வதன் மூலம் இப்பணத்தைச் சேமிக்க முடியும். புகையிலை செய்கையால் வரும் வருமானத்தை விட உருளைக் கிழங்கால் அதிக வருவாயை விவசாயிகள் பெறமுடியும்.

மற்றும் பலரும் பேசினர்.

# சமூகசேவை மந்திரி பிரார்த்தனை

பம்பலப்பிட்டி, செவ்
சமூக சேவை மந்திரி திரு அசோகா கருணரத்ன கதிர்காமம் சென்று வரட்சியான இடங்களிலெல்லாம் உடனடியாக மழைபெய்ய வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டார்.


வரி விளம்பரம்

### தேவை

ரெசவு வேலை செய்ய நன்கு அனுபவமுள்ள பெண்மணிகள் தேவை. உடன் நேரில் விண்ணப்பிக்கவும். தங்குவதற்கு போடிங் வசதி தரப்படும். அன்னம்ஸ சாரி வேக்ஸ மின்சார நிலையவீதி, விக்னேஸ்வரா மேல்மாடி, யாழ்ப்பாணம். 7

இலங்கைப் பிரஜா உரிமையுள்ள அல்லது விசா உள்ள அக்கௌண்டன் (இந்தியர்) தேவை. சம்பளம் ரூ: 150/- மேலும் விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும். யப்பான் ஜுவலர்ஸ், 164, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம் 14

ஹோட்டலில் உணவு, மதுபானம் பரிமாறுவதற்கும், சமையலுக்கும் வேலையாட்கள் தேவை நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கவும். 181, பாங்ஷால் வீதி யாழ்ப்பாணம். 20

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும் விபரங்களுக்கு: த. செட்டி, 896, கொழும்பு (P. O. Box: 896, Colombo)

### விற்பனைக்கு

புத்தம்புதிய ஸ்ரொக் பெசக் ரேடியோ பட்டரிகள் (BEREC Batteries கம்பெனி விலைக்கு உடனடியாகக் கிடைக்கும். T. N லிங்கம் & சன், சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம். 21

நல்ல நிலையிலுள்ள எஞ்சினும் (Lister 7½ HP) துர்மா. நெல் அரைக்கும் யந்திரங்களும் விற்பனைக்குண்டு. கலா பவனம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 22

'தமிழ்நேசன்' பத்திரிகை 7-வது வெளியீடு 5-4-65 தொடக்கம் எல்லா நியூஸ் ஏஜென்சிகளிடமும், கடைகள், ஹோட்டல்களிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை சதம் 15. நிர்வாகி, 'தமிழ்நேசன்', 80, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 13


# பின்போடப்பட்ட சோதனை நடைபெறும்

பம்பலப்பிட்டி, செவ்வாய்
அரசாங்க லிகிதர் சேவை இரண்டாந்தர உயர்ச்சிக்குரிய சோதனை இவ்வருடம் 22ந் தேதி மே மாதம் நடைபெறும். 30ந் தேதி ஜனவரி மாதம் நடைபெறவேண்டிய சோதனை பின்போடப்பட்டிருந்தது.




அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்

* 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
* 8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.
* இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம் தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜூபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்த கிணற்றில் 19 பாக்கு மூடைகள்

## புங்குடுதீவில் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்வாய்

தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை சுங்கப்பகுதி சப் கலெக்டர் திரு. எம். வீரசிங்கம் தலைமையில் சென்ற கோஷ்டியினர், புங்குடுதீவில் பாழடைந்த கிணற்றொன்றிலிருந்து 600 ரூபா பெறுமதியான 19 பாக்கு மூடைகளை எடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் பொருள்கள் கடத்தப்படுகிறதென்றும் இந்த விஷயத்தில் உஷாராக விருக்கும்படியும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஊர்காவற்றுறை சுங்கப்பகுதி சப் கலெக்டர் திரு. எம். வீரசுந்தரம் பல தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

சில தகவல்களைத் தொடர்ந்து திரு வீரசுந்தரமும் கிராமசேவகர் பொன்னம்பலமும் புங்குடுதீவில் தேடுதல் நடத்தினர். இதன் பலனாக ஒரு பாழடைந்த கிணற்றில் 19 பாக்கு மூடைகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. சுங்கப்பகுதி உத்தியோகஸ்தர்களின் உதவியுடன் இவை வெளியே எடுக்கப்பட்டன.

(விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன)

## நாகநாதனும் 'மீனாட்சியும்'

கொழும்பு, திங்கள்

இன்று சபாநாயகர்தெரிவுக்காக பார்லிமெண்ட் கூடியபோது டாக்டர் நாகநாதன் கோஷ்சென்றே சபைக்கு வந்தார் வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது துவந்த டாக்டர் நாகநாதனை எதிர்க்கட்சியினரில் பலரும் "சுறுக்கா வாங்கோ, சுறுக்கா வாங்கோவேன்" என்று தமிழில் அழைத்தனர்.

●

உவாபரணகமுவ எம். பியும், ஜாதிக விமுக்தி பெரமுனை அங்கத்தவருமான திருமதி குசுமா ராஜரத்தின சபைக்கு வரும் போது சபைக்கு வெளியே நின்ற சில கட்சி ஆதரவாளர்கள் 'மீனாட்சிவாங்கோ, மீனாட்சி வாங்கோ' என்று கோஷமிட்டு ஆரவாரம் செய்தனர்.

●

சபைக்கு வெளியே நின்ற சனத்திரளில் தமிழர் போலக்காணப்பட்ட ஒவ்வொருவரைப் பார்த்ததும் எதிர்க்கட்சி ஆதாவாளர்கள் 'ஆரேகரா' 'வணக்கம்' என்று கோஷமிட்டு ஆரவாரித்தனர்

●

### செனட்டர்கள் பிரமாணம்

இன்று செனட் சபையில் செனட்டர் திருச்செல்வம், திரு ஜே பி ஓபயசேகரா ஆகியோர் விஸவாசப்பிரமாணம் செய்து கொண்டனர் செனட்டர் க நடேசபிள்ளையின் மரணத்துக்கு செனட்சபை அனுதாபம் தெரிவித்தது.

## ஹாய் இயக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

"நாமெல்லோரும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள்போல், துவேஷ, குரோத எண்ணங்களை விடுத்து ஒருவரை ஒருவர் நேசித்து அவர்களிடை அன்பு உறவு பூண்டு மேலான நல்வாழ்வை கடைப்பிடிக்க வேண்டும். சாதி, மத, இன வேறுபாடில்லாமல், அமெரிக்கர், ஐரோப்பியர், ஆபிரிக்கர், இந்தியர், இலங்கையர், அவுஸ்திரேலியர் என்ற தேசவேறுபாடில்லாமல், வெள்ளை நிறத்தவன், கறுப்புநிறத்தவன் என்ற நிற வேறுபாடில்லாமல் உலகத்திலே எல்லோருக்கும் எப்படி ஒளி அத்தியாவசியம் தேவையோ, அதை நாம் எப்படிப் பெறவிரும்புகிறோமோ அதேபோல் உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் சகோதர மனப்பான்மையுடன் வாழக் கடமைப்பட்டுள்ளோம், இந்த மேலான இலட்சியத்தை அவதார புருஷரான பஹாயுல்லா அவர்கள் அனுசரித்து போதித்து வந்துள்ளார்கள்"

இவ்வாறு திரு கீத்டிபோலோ பஹாய் இயக்க போதனை பற்றி கரவெட்டி மேற்கு மத்தொனி வல்லுவர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பஹாய் இயக்கசகோதரர் மத்தியில் பேசுகையில் கூறினர்.

திரு. கீத்டிபோலோ ஏப்ரல் மாதம் 21-ம் திகதி அகில உலகமும் நடைபெறவிருக்கும் பஹாய் இயக்க தெரிவுக் குழுவில் நடைபெறவேண்டிய ஒழுங்குவிதிகள் பற்றியும் குறிப்பிட்டார், திரு வி. பாலசிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர். யாழ்ப்பாணம், வதிரி நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, புத்தூர், கோண்டாவில் போன்ற இடங்களுக்கும் இக்குழுவினர் விஜயம் செய்தனர்.

## சர்வகலாசாலை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிகைபாகன் ஸ்ரீராமகிருஷ்ண மடத்துடனும் சுவாமி விபுலானந்தருடனும் கொண்டிருந்த தொடர்பினால் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரிய சேவையை ஏற்றார். பின்னர் 1935-ம் ஆண்டில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலையில் அதிபராகப்பதவி ஏற்றார். அன்றிலிருந்து இன்றுவரை அதே பதவியிலிருந்து வரும் திரு அம்பிகைபாகன் வித்தியாலய வளர்ச்சிக்காக ஆற்றிய பணியைப் பாராட்டுமுகமாக சில வருடங்களுக்கு முன் வித்தியாலயப் பழைய மாணவர்களும், மற்றையோரும் இருபத்தைந்து வருடப் பூர்த்தி சேவையை வெள்ளி விழாவாகக் கொண்டாடினர். கலைகளிலும் இலக்கியத்திலும் ஆர்வமும் ஈடுபாடுமுடைய திரு அம்பிகைபாகன் ஓர் எழுத்தாளருமாவார், காலஞ்சென்ற கவிப்புலவர் நவரத்தினம் அவர்களுடனும் மறைந்த செனட்டர் க. நடேசபிள்ளை அவர்களுடனும் விபுலானந்த அடிகளாருடனும் அன்பும் உறவும் கொண்டிருந்த திரு. அம்பிகைபாகன் கலாநிலையத்திற்கும் சேவைபுரிந்துள்ளார். தமிழார்வமும் சமயப்பற்றுமிகுந்த இவர் யாழ்ப்பாணத்தில், சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் தமிழ் விழாவை நடத்தி வெற்றி காண்பதில் பெரும்பங்கு கொண்டிருந்தார். இலங்கையின் சுதந்திரத்துக்கு முதல் குரல் எழுப்பிய 'வாலிபர் மகாநாட்டிலும்' பங்கு கொண்ட திரு அம்பிகைபாகன் தமிழ் நாட்டிலும் பல தமிழ் அறிஞர்களைத் தமது நண்பர்களாகக் கொண்டுள்ளார்.

## அன்னதானம்

கொக்குவில், செவ்வாய்

கொக்குவில் மேற்கில் இருக்கும் வாரதி அம்பாள் கோவிலில் ... அன்னதானமும் விசேட அபிஷேகமும் நடைபெற்றது.

### பேராசிரியர் நடராசாவிற்கு புதிய பதவி

பம்பலப்பிட்டி, செவ்வாய்

இலங்கை சர்வகலாசாலை சட்டப்பேராசிரியர் நி நடராஜா, சட்டக்கல்லூரியின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளாரெனத் தெரியவருகிறது. இவ்வருடம் ஜூலை மாதத்தில் இவர் இப்பதவியை ஏற்றுக்கொள்வார் என்றும் அறியப்படுகிறது பேராசிரியர் இலங்கை சர்வகலாசாலைக்கு செல்வதற்கு முன்னர் சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராக சிலகாலம் கடமையாற்றினர்.

## விசேஷ பஸ் சேவை ரத்து

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேஷ பஸ் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரிகள் விசேஷ பஸ் வண்டிக்கு ஏற்பாடு செய்திருந்தது. கடைசி நேரத்தில் பஸ் வண்டி சேவைக்கு விட முடியாது என அறிவிக்கப்பட்டது. புதிய விசேஷ பஸ் சேவைகளை ஏற்க வேண்டாமென இ. போ. ச. தலைமைக் காரியாலயம் உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 'அனாதை' டாக்ஸி

ஊர்காவற்றுறை, செவ.

வேலணைத் துறைமுகத்திற்கு அண்மையில் ஒரு டாக்ஸி வாகனம் 'அனாதை'யாக விடப்பட்டு இருந்ததை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது;

கிரியப்பமு என்ற இடத்தைச் சேர்ந்தது எனக் கூறப்படும் இந்தடாக்ஸியை ஊர்காவற்றுறைப்பொலிசார் பாதுகாப்பில் வைத்திருக்கின்றனர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு தியாகராசா இதுபற்றி விசாரணை நடத்தி வருகிறார்.

## 'தோட்ட ஆசிரியர்களுக்கு நீதி வழங்குவேன்'

பம்பலப்பிட்டி, செவ்

'நான் எல்லா தோட்ட ஆசிரியர்களுக்கும் நீதி வழங்குவேன்' என்று கல்வி அமைச்சர் திரு. ஐ எம். ஆர். ஏ இரியகொல அகில இலங்கை தோட்ட ஆசிரியர்கள் சங்கப் பொதுக்காரியதரிசி திரு. ஆர் சுப்பிரமணியம் சங்கத்தின் சார்பில் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மந்திரியிடம் சமர்ப்பித்தபோது, மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## பிரதமரின் தொலைபேசி புதிய சாதனம் அமைக்கப்படும்

கொழும்பு, செவ்

பிரதமரின் வாசஸ்தலமான 'வூட்லண்ட்'ஸில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசியில் பேசுவதை ஒற்றுக்கேட்க முடியாத வகையில் புதியசாதனம் ஒன்று பொருத்தப்படும். பிரதமர் டட்லி சேனநாயக்கா தொலைபேசியில் பேசும் போது மத்திய தொலைபேசி இணைப்பு நிலையத்தில் சில விஷமிகள் ஒற்றுக் கேட்பதாகச் செய்திகள் கிடைத்திருப்பதைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

பிரதமரின் உத்தியோக வாசஸ்தலமான 'அலரிமாளிகைக்கு' வரும் தொலைபேசி அழைப்புகளை சில உத்தியோகத்தர்கள் தடுத்துவிடுவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

## "தொழிலில் . . :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை ஆசிரியர் திரு. பி. வித்தாரண பேசுகையில் கூறினார்

ஒன்பது மாதப பயிற்சி பெறுமுகமாக 16 மாணவர்கள் இனுவில், மட்டுவில், பருத்தித்துறை சாவகச்சேரி ஆகிய இடங்களிலிருந்து இங்கு வந்துசேர்ந்துள்ளனர்,

அகில இலங்கை வேலை வேண்டுவோர் சங்க முயற்சியால் இங்கு கொண்டு வரப்பட்ட இப்பயிற்சி நிலையம் நடந்த 18 மாதங்களாக சாவகச்சேரியை சேர்ந்த நுணாவிலில் செயல்பட்டுவந்தது.

இப்பயிற்சி நிலையம் இங்கும் சுமார் 18 மாத காலத்திற்குச் செயல்படலாம் என நம்பப்படுகிறது,

## பேராசிரியர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை அமெரிக்க கலாசார சபையின் ஆதரவில் பேராசிரியர் திரு ஜோன் எம். ஹோல்டன் இந்நிலையத்தில் நாளை மாலை 6-30 மணிக்குச் சொற்பொழிவாற்றுவார்.

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

பம்பலப்பிட்டி, செவ்

வகுப்புவாதப் பிரச்னைகளையும் நாட்டின் தேசிய நலனை பாதிக்கும் வகையில் மக்களை தூண்டுபவர்கள் மேலும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரசாங்க சார்பு நின்றக் கட்சியினர் தீர்மானித்துள்ளனர்,

## திரு. அல்விஸுக்கு புதிய பதவி

பம்பலப்பிட்டி செவ்

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ. டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்காவின் அந்தரங்கக் காரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. டங்கன் டி அல்விஸ தற்போது சிரேஷ்ட உள்ளூராட்சியன்றக் கமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார், முன்னர் மந்திரிசபையின் உதவிக் காரியதரிசியாகவும் திரு அல்விஸ கடமையாற்றியுள்ளார்.

## "சேரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகல் 12 மணியிலிருந்து ஒரு மணிவரை நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூடிய பின்னரும் தொடர்ந்து வாசிக்கப்பட்டது

பல்வேறு சாட்சிகளினது சாட்சியங்கள் பற்றியும் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்ட நீதியரசர்கள், "இடதுசாரிக் கட்சித் தலைவர்களைக் கைதுசெய்வதென்ற உத்தரவுக்கு கேணல் சேரமும் திரு. வி வி. திஸநாயக்காவுமே பொறுப்பு. திரு பீலிக்ஸ டயஸ பண்டாரநாயக்கா அல்ல" என்று குறிப்பிட்டனர்.

இராணுவத் தளபதிக்குத் தெரியாமல் ஐந்து இராணுவ உத்தியோகத்தர்களை கேணல் டி சேரம் அழைத்துப் பேசினார் என்ற சாட்சியத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ள நீதியரசர்கள் தாம் "அழைத்துப் பேசவில்லை" என்ற கேணல் டி சேரத்தின் மறுப்பை ஏற்கவில்லையெனவும் தெரிவித்துள்ளனர்.

## கம்யூனிஸ்டுளுக்கு மாதம் ரூ. 50

திருவனந்தபுரம், ஏப்ரல்

தடுப்புக்காவலிலுள்ள 56 கம்யூனிஸ்டுகளின் குடும்பத்திற்கு மாதம் 50 ரூபாய் உதவிப்பணம் வழங்குவதென கேரள அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

## சிறிமாவோ எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, திங்கள்

எதிர்க்கட்சியினர் இன்று நடத்திய ஒரு கூட்டத்தில ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயகாவை எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்தனர் திரு எம் பி டி. இஸட் சிறிவர்த்தன எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாகத் தெரிவுசெய்யப்பட்டார்

## சி. பி. டி' சில்வா சபை முதல்வர்

அரசாங்கப் பாராளுமன்றக் கட்சி இன்றுகூடி திரு சி பி டி' சில்வாவை சபை முதல்வராகத் தெரிவுசெய்தது

### மற்றோர் பதவி காலி

பார்லிமெண்டில் மற்றோர் நியமன அங்கத்தினர் பதவி இன்னும் காலியாக இருக்கிறது மொத்தம் 6 நியமன அங்கத்தினர்களில் 5 பேர் மட்டுமே இதுவரை நியமிக்கப்பட்டுள்ளனர்

### கமிட்டிகள் தலைவர்

கொழும்பு, திங்கள்

கமிட்டிகளின் தலைவராக ஹியூகஸ் பெர்னாண்டோ தெரிவு செய்யப்பட்டார் உதவிதலைவராக திரு டி. பி தென்னக்கூன் தெரிவு செய்யப்பட்டார்

### சன்மானம்

ஒரு பதக்கம் சங்கிலியும் ஒரு சோடி காப்பும் நேற்று முன்தினம் 4-4-65 மாலை ஆனைப்பந்தியடி ஆங்கில வைத்தியசாலைக்கு முன்பாக காணாது போய்விட்டது. இதனைக் கண்டெடுத்தவர் அல்லாவிடில் இதைப்பற்றிய விபரம் அறிந்தவர் 79/B, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். மிக்க நன்றியாக இருக்கும். 18

நுவரேலியா, திங்கள்

நுவரெலியாவைச் சேர்ந்த கே. பாலசுப்பிரமணியம் என்பவர் கால்ரூத்தல் புளியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க இரண்டு சதம் கூட்டி 15 சதத்திற்கு விற்றதனால் ரூபா 400 அபராதம் விதிக்கப்பட்டது

## எம். பிக்கு முடிசூட்டுவிழா

கல்முனை, திங்.

மட்டக்களப்பு எம்.பி. திரு. செ. இராசதுரைக்கு தங்கத்தால் முடி செய்து சூட்டுவதற்கு இங்குள்ள செட்டிமார்களும் பொற்கொல்லர்களும் முயற்சி எடுத்து வருகின்றனர். அடுத்த வார இறுதியில் மட்டக்களப்பு கோட்டை மைதானத்தில் முடி சூட்டு விழா நடைபெறுமென அறிய வருகிறது.

இவர் மட்டக்களப்பு தொகுதியின் முதலாவது அங்கத்தவராக அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளதால் இவருக்கு முடி சூட்ட வேண்டும் எனப் பொது மக்களில் பலரும் அபிப்பிராயப் படுகின்றனர்.

இப்பத்திரிகை சுழிபுரம் ... ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 95-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org